**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 44/2016** **Date:09.03.2026.**

**(PW1)-** வில்பிறட் சாம் ஜோஸப்

**1** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. வழக்கு பட்டிகை சொத்தின் உரிமை குறித்து எந்த ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அப்பாவின் பெயரில் உள்ள வரி ரசீது தாக்கல் செய்துள்ளேன். எனது அப்பாவிற்கு வழக்கு பட்டிகை சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது பாட்டி எனது அப்பாவிற்கு வாய்மொழியாக கொடுத்த சொத்தாகும். வேறு எந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். பட்டிகை சொத்தின் பழைய சர்வே எண் மற்றும் புதிய சர்வே எண் என்ன என்றால் பழைய சர்வே எண் 3472 மற்றும் புதிய புல எண் 678/12 ஆகும்.

2. எனது பாட்டியின் பெயர் என்ன என்றால் தொமந்தோணிநாடாச்சி ஆகும். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 5 வாரிசுகள் ஆவர். எனது பாட்டி அவரது சொத்தை அவரது வாரிசுகள் அனைவருக்கும் வாய்மொழியாக பிரித்து கொடுத்துள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். எனது தகப்பனாரின் தம்பி மரியகாணிக்கம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணத்தில் புதிய புல எண் 678/12 ற்க்கு பழைய சர்வே எண் 3475 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண் சொத்தைதான் எனது சித்தப்பா மரியகாணிக்கம் 1ம் பிரதிவாதிக்கும் கிரயம் கொடுத்துள்ளதாக வா.சா.ஆ.9 ஆவணத்தில் துலங்குகிறது என்றால் சரிதான். மேற்படி கிரய ஆவணம் 11.02.2002 ல் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான்.

3. நான் குறிப்பிட்ட பழைய சர்வே எண் 3472 ற்க்கு புதிய புல எண் பற்றி எந்த

குறிப்பும் வா.சா.ஆ.9 ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். நான் உரிமைக்கோரும் சொத்தும் 1ம் பிரதிவாதி எனது சித்தப்பாவிடம் இருந்து கிரயம் பெற்ற சொத்தும் வெவ்வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல. சொத்தின் அடையாளத்தை நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எடுக்கவிலலை. சர்வே எண் 678/12 ல் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 7.5 ஏர்ஸ் ஆகும். மேற்படி முழு சொத்திற்கும் நான் பரிகாரம் கேட்காமல் இருப்பதற்கு ஏதேனும் காரணம் உண்டா என்றால் முழு சொத்திற்கும் கேட்டுள்ளேன்.

4. வாதியாகிய நாங்கள் தாவா சர்வே எண் சொத்தை பொறுத்து ஏதேனும் ஆவணம் ஏற்படுத்தியுள்ளோமா என்றால் இல்லை. தாவா சொத்தை நான் அனுபவம் செய்ததை காட்டகூடிய ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் குறிப்பிடுவது போல் எனது அப்பா பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தை தவிர்த்து எனது அப்பா பெயரில் தாவா சொத்து என்பதை காட்டகூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான்.

5. மேலும் வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனது அப்பாவின் பெயர் வரி செலுத்துபவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் பட்டாதாரர் பெயரில் எனது பாட்டியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணம் மூலம் தாவா சர்வே எண் சொத்திற்கு எனது தகப்பனார் பெயருக்கு பட்டா மற்றும் தீர்வையும் ஏற்படவில்லை என்பது புலப்படவில்லையென்றால் சரிதான். எனவே வா.சா.ஆ.3 ஆவணமும் மூலம் தாவா சொத்து வாதிகளாகிய எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று எங்களால் உரிமைகோர முடியாது என்றால் சரியல்ல அனுபவம் எங்களிடம் தான் உள்ளது.

6. நாங்கள் அனுபவம் செய்யகூடிய எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான், தாக்கல் செய்யவில்லை. பழைய புல எண் 3472,3475 ஆகிய புல எண்களுக்கான புல ஒப்புமை சான்று என்று தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.4 ஆவணத்தில் மேற்படி பழைய புல எண்களுக்கான ஒப்புமை குறிப்பிடப்படவில்லையென்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4 ஆவணம் ஒப்புமை சான்று அல்ல என்றாலும் அது சர்வேபடி சொத்துகள் உட்பிரிவு செய்யப்பட்டதை காட்டகூடிய பதிவேட்டின் நகல் என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் 1ம் பிரதிவாதியின் சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. அரசு அதிகாரிகள் எனது மனுவை நிராகரித்ததற்கு எதிராக வேறு நடவடிக்கை ஏதேனும் எடுத்துள்ளேனா என்றால் எடுக்கவில்லை, இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதியிடம் உள்ள தாவா சொத்து சம்பந்தமான ஆவணங்களான கிரய பத்திரம், வரி ரசீது, பட்டா முதலிவற்றை ஆய்வு செய்து அதன் பின்னரே 2 ம் பிரதிவாதியால் 1ம் பிரதிவாதிக்கு இழப்பீடு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு 1ம் பிரதிவாதியின் உரிமையை முடிவு செய்து இழப்பீடு கொடுத்தபின்பும் மீண்டும் தாவா சொத்திற்கு நான் உரிமை கொண்டாடுவது ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றாலும் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றாலும் சரியல்ல.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**